பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
06 03 2025 **THURSDAY** 12 40 **PM**
வணக்கம். ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- உத்ராகண்ட் மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- தென்மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் குறித்து மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு திருவனந்தபுரத்தில் இன்று ஆய்வு செய்தார்.
- தமிழகத்தில் 22 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் இன்று திறந்து வைத்தார்.
- ஹமாஸ் அமைப்பினர் பிடித்து வைத்துள்ள பிணைக் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்
- குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<**

உத்ராகண்ட் மாநிலத்தில் சுற்றுலா வளர்ச்சியை மேம்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அம்மாநிலத்தின் **Harsil** பகுதியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அவர், கேதார்நாத் மற்றும் **Hemkund** ரோப்கார் திட்டங்களுக்கு மத்திய அமைச்சரவை நேற்று ஒப்புதல் அளித்ததை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம் புனிதப் பயணம் மேற்கொள்வோருக்கான பயண நேரம் வெகுவாக குறைவதோடு, சுற்றுலாத்துறையும் வளர்ச்சியடையும் என்று கூறினார்.

இதன் மூலம் உத்ராகண்ட் மாநிலத்தின் சுற்றுலா சார்ந்த பொருளாதாரம் மேம்படும் என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஒரே கட்சியின் ஆட்சி நடைபெறுவதால், உத்ராகண்ட்டில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் கூறினார்.

முன்னதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி, **Mukhwa** பகுதியில் உள்ள கங்கா தேவி கோவிலில் வழிபாடு செய்தார்.

**>>>>>><<<<<**

கணினி வன்பொருள் உற்பத்தியில் இந்தியா தற்போது உலகின் முன்னணி நாடாக உருவெடுத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

நாளேடு ஒன்றில் அவர் எழுதியுள்ள கட்டுரையில் இதுவரை இந்தியா மென்பொருள் உற்பத்தியில் முன்னணி நாடாக திகழ்ந்த நிலையில், தற்போது வன்பொருள் உற்பத்தியிலும் சாதனை படைத்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

ஐந்து இடங்களில் செமிகண்டக்டர் ஆலைகளுக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டியுள்ள அவர், மின்னணு சாதனங்களின் உற்பத்தியிலும் இந்தியா உலக அளவில் தனது நிலையை வலுப்படுத்தியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் முதலாவது செமி கண்டக்டர் ச்சிப் தயாரிக்கும் ஆலை, இந்த ஆண்டு உற்பத்தியை தொடங்கும் போது, அது நாட்டிற்கு பெரிய மைல்கல்லாக அமையும் என்றும் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<**

தென்மாநிலங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் சிறுபான்மையினருக்கான நலத்திட்டங்கள் குறித்து அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு திருவனந்தபுரத்தில் இன்று ஆய்வு செய்தார்.

சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் குறித்து இந்தக் கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இத்திட்டம் தொடர்பான பயிலரங்கிலும் அவர் கலந்து கொண்டார்.

சிறுபான்மையினர் நலத்துறை இணையமைச்சர் திரு. ஜார்ஜ் குரியன் மற்றும் தென் மாநிலங்களைச் சேர்ந்த உயரதிகாரிகளும் இதில் கலந்து கொண்டனர்.

>>>>>><<<<<

புதிய வருமான வரி மசோதா தொடர்பான மக்களவை தெரிவுக் குழு கூட்டம், புதுதில்லியில் இன்று அதன் தலைவர் திரு. **Baijayant Panda** தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தின் போது, நாடாளுமன்றக் குழுவின் அழைப்பின் பேரில் கலந்து கொண்ட இந்திய பட்டய கணக்காளர் அமைப்பு மற்றும் தனியார் அமைப்பின் உயரதிகாரிகள் இம்மசோதா குறித்த கருத்துக்களை பதிவு செய்தனர்.

>>>>>><<<<<

தமிழகத்தில் பத்திரப்பதிவு துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தில் 22 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட 12 சார்பதிவாளர் அலுவலக கட்டடங்களை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக இன்று திறந்து வைத்தார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில், அம்மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட இரண்டு சார்பதிவாளர் அலுவலங்களையும் அவர் திறந்து வைத்தார்.

மேலும் வருவாய்த்துறையின் பயன்பாட்டிற்காக சுமார் நான்கரை கோடி ரூபாய் மதிப்பில் வாங்கப்பட்டுள்ள 51 புதிய வாகனங்களின் சேவையையும் அவர் தொடங்கி வைத்தார்.

சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது மற்றும் சிற்பக்கலைஞர்களுக்கான கலைச்செம்மல் விருதுகளையும் முதலமைச்சர் இந்த நிகழ்ச்சியில் வழங்கினார்.

>>>>>><<<<<

பிரதமரின் விவாசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டம், பயிர் காப்பீடு போன்ற நலத்திட்டங்களை எளிதில் பெறும் வகையில், தேசிய அடையாள அட்டை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

இதன்படி, தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளின் நிலவுடைமை மற்றும் ஆதார் எண் உள்ளிட்ட விவரங்களை பதிவு செய்யும் பணி முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - அனுராதா 48 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<

மும்மொழிக் கொள்கைக்கு ஆதரவாக சென்னையில் இன்று கையெழுத்து இயக்கம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவர் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் உள்ளிட்ட அக்கட்சியின் தொண்டர்கள் கைது செய்யப்பட்டனர்.

சென்னை எம்ஜிஆர் நகர் பகுதியில் திருமதி. தமிழிசை சௌந்தரராஜன் கையெழுத்து இயக்கத்தை மேற்கொண்டபோது, அனுமதியின்றி இந்த இயக்கத்தில் ஈடுபட்டதாக கூறி காவல்துறையினர் கைது செய்தனர்.

>>>>>><<<<<

தமிழகத்தின் கரூர் மற்றும் சென்னையில் அமலாக்கத்துறையினர் பல்வேறு இடங்களில் இன்று சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

கரூரில் அமைச்சர் திரு. செந்தில் பாலாஜியின் நண்பர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் சிலருக்கு சொந்தமான இடங்களில் இந்த சோதனை நடைபெற்று வருகிறது.

சென்னையிலும் ஆழ்வார்பேட்டை பகுதியில் ஒப்பந்ததாரர் மற்றும் மின்வாரிய அதிகாரி ஒருவரின் இல்லத்திலும் அமலாக்கத்துறையினர் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

>>>>>><<<<<

மக்கள் ஆரோக்கியத்துடன் வாழ மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக, பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் மூலம் குறைந்த விலையில் தரமான மருந்துப்பொருட்கள் கிடைப்பதாகவும், இது தங்களுக்கு பெருமளவு பயனுள்ளதாக இருப்பதாகவும் தமிழகத்தின் விழுப்புரம் மாவட்டத்தை சேர்ந்த பயனாளிகள் தெரிவித்தனர்.

*(சவுண்ட் பைட் - பயனாளிகள் - 35 செகண்ட்ஸ்)*

**>>>>>><<<<<**

ஹமாஸ் அமைப்பினர் காஸா பகுதியில் பிடித்து வைத்துள்ள பிணைக் கைதிகள் அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று அமெரிக்க அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

பிணைக் கைதிகள் விடுதலை தொடர்பாக ஹமாஸ் அமைப்பினருடன் அமெரிக்கா நேரடி பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக வெள்ளை மாளிகை அதிகாரப்பூர்வமாக தகவல் வெளியிட்ட நிலையில், திரு. ட்ரம்ப் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஹமாஸ் அமைப்பினர் பிணைக் கைதிகளை விடுவிப்பது அவசியம் என்று குறிப்பிட்டுள்ள திரு. ட்ரம்ப், பிணைக் கைதிகளை விடுவிப்பதிலோ அல்லது அவர்களின் சடலங்களை ஒப்படைப்பதிலோ தாமதம் செய்தால் கடும் விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் எச்சரித்துள்ளார்.

**>>>>>><<<<<**

குருகிராம் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** காலிறுதிக்கு முந்தையச் சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-2 என்ற செட்கணக்கில் ஸ்பெயினின் **Carlota Martinez**–ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் அங்கிதா ரெய்னா, 5-7, 6-3, 6-2 என்ற செட்கணக்கில் **Riya Bhatia**-வை வென்று காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<**

செஸ் போட்டிகளுக்கான சர்வதேச தரவரிசைப் பட்டியலில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் 14வது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

**Prague** சர்வதேச செஸ் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆறாவது சுற்று இறுதியில் பெற்ற கூடுதல் புள்ளிகளின் அடிப்படையில் அவர் தரவரிசையில் முன்னேறியுள்ளார்.

**>>>>>><<<<<**

ஜெர்மனியில் நடைபெற்று வரும் இளையோர் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rounak Chouhan** மூன்றாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

19 வயதுக்குட்பட்டோருக்கான இப்போட்டியின், இரண்டாவது சுற்று ஆட்டத்தில் அவர், 21-8, 21-7 என்ற செட்கணக்கில் ஜெர்மனியின் **Tim Schmitz**–ஐ வென்றார்.

**>>>>>><<<<<**